தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

ஆணை எண்: 98 /பேரூ/2026
நாள் : 05.08.2026

G. ராஜா,
சிங்கம்புணரி,
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி, கதவு எண். 9-3-14, BSNL அலுவலகம் அடுத்து, சுந்தரம் நகர், 2வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. G. ராஜா என்பவரது 26.03.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.03.2026 அன்று பெறப்பட்டு, 98/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி, கதவு எண். 9-3-14, BSNL அலுவலகம் அடுத்து, சுந்தரம் நகர், 2வது தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. G. ராஜா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 26.03.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" I, G. Raja, a property tax-paying resident of Singampunari Town Panchayat, respectfully submit this complaint in the larger public interest to ensure financial accountability, transparency and prevention of misappropriation of public funds in Singampunari Town Panchayat, Sivagangai District.

This complaint is against the following officials for serious irregularities and corruption.

1. Executive Officer – Mr. Shanmugam, Singampunari Town Panchayat, Sivagangai District.
2. Bill Collector – Mr. Rajendran.
3. Bill Collector – Mrs. Abhinayakam.

I Property Tax Assessments of the Complainant

I own properties assessed under the following Assessment Number and regularly pay municipal taxes: 3184, 8278, 8284, 8279, 8280, 8281, 8282 and 8283. Despite my compliance, the functioning of the Town Panchayat administration raises serious concerns.

II Financial Irregularities, Audit Violations and Manipulation of Accounts

It is observed that the Town Panchayat has failed to maintain proper financial documentation. Specifically:

a) Expenditure ledgers, vouchers, invoices, fuel records and scheme accounts are not properly maintained.
b) Many vouchers are missing or not entered into ledgers.
c) Several expenditures were made without proper GST invoice filing.
d) Work-wise expenditure, contractor payments and tender records show lack of GST compliance.
e) This reflects deliberate manipulation of accounts, misuse of public money and possible fraud.

III Misuse of Financial Powers – Unaccounted Expenditure

Large sums appear to have been spent without proper documentation, approval process, accounting and audit compliance, resulting in suspected loss to Government funds.

IV Request for GST Action and Audit

In view of the above, I request the concerned GST authority to take action through your office, including:

1.Conduct a GST Audit under Section 65 for the last five (5) years.

2. Conduct inspection and seizure of documents under Section 67, wherever required.

3. Issue notice for non-filing of GST returns under Section 46.

4. Assess tax liability for unfiled years under Section 62.

5. Initiate recovery proceedings under Section 79 if tax was collected but not remitted.

6. Initiate prosecution under Section 132 if fraud is established.

V. Illegal Water Connections, Bribery and Misappropriation of collections

I further submit that the Executive Officer has illegally granted numerous water connections to the public without following prescribed rules or maintaining proper records, especially in Ward No.1 (out of 18 wards), where unauthorized connections are found to be very high. It is also alleged that:

f) Excess amounts are collected from the public in the name of "Government charges".

g) Payments are not properly recorded.

h) Proper receipts / bills are not issued to the public.

i) Collections are not accounted for, indicating misappropriation of public money.

VI Corruption and Disproportionate Assets

It is widely known among the public that the Executive Officer collects bribes regularly and illegal money is being extorted from the public. Before joining the Town Panchayat, he was only a tenant. However, he has now allegedly acquired:

- Properties worth several crores of rupees.
- Two luxury Benz cars.

These are grossly disproportionate to his known sources of income, indicating corruption, illegal gratification and possible benami transactions.

VII Non-Execution / Poor Execution of works but full bills claimed

It is respectfully submitted that several works / projects sanctioned and executed through this Town Panchayat are found to be :

j) Incomplete,

k) Poorly executed, or

l) Not executed at all.

Despite the above, full bills appear to have been claimed and passed as if the works were duly completed, resulting in suspected large-scale misappropriation of public funds.

VIII Misuse of cheques, Illegal Budget Allotment and Misappropriation of Funds

There are serious allegations of :

m) Cheque misuse,

n) Illegal budget allotment,

o) Diversion of public funds, and

p) Misuse of Town Panchayat financial powers,

which require immediate intervention at the Ombudsman level.

IX Illegal Building Approval

The Executive Officer cancelled the property tax assessment of one Mr. Subramanian, who is the original owner of the property. Without verifying the Encumbrance Certificate (EC) standing in the name of Mr. Subramanian, the Executive Officer cancelled the assessment in his name and illegally granted building approval to one Mr. Balamurugan, who is merely an attested witness to Mr. Subramanian's documents. Furthermore, the construction carried out is not in accordance with the approval plan.

X Non-reply to RTI Applications

The Town Panchayat has repeatedly failed to respond to my RTI applications dated 15.08.2025, 24.11.2025, and 19.12.2025, which itself indicates deliberate suppression of information and a lack of transparency.

Reliefs / Action Requested (Urgent)

In view of the above, I request your good office to kindly take immediate and stringent action as follows:

1. Immediate secret inspection of Singampunari Town Panchayat office records and field verification.
2. Immediate suspension of the Executive Officer Mr. Shanmugam to prevent tampering with evidence.
3. Vigilance enquiry into illegal assets, disproportionate properties and benami ownership.
4. Special audit of all expenditures from his joining date, including scheme funds, fuel records, contractor bills and tender files.
5. Investigation into illegal water connections and unaccounted collections, especially in Ward No. 1.
6. Action against Bill Collector Mr. Rajendran and Staff Mrs. Abhinayakam for aiding, supporting, or facilitating the above irregularities.
7. Registration of this complaint and initiation of strong action to protect public funds and State GST revenue.

I request that this complaint be treated as urgent and that necessary action be initiated at the earliest in the interest of transparency and accountability. Kindly acknowledge receipt and inform me of the action taken".

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் **24.04.2026** நாளிட்ட அறிவிப்பு மூலம் சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது **15.05.2026** நாளிட்ட அறிக்கை ந.க.எண். **73/2026/**அ1ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

வ.எண்.	புகாரின் தன்மை	பதிலறிக்கை
1	1) Property Tax Assessments of the Complainant. I own properties assessed under the following Assessment Nos. and regularly pay municipal taxes: 3184, 8278, 8284, 8279, 8280, 8281, 8282, 8283. Despite my compliance, the functioning of the Town Panchayat administration raises serious concern.	மனுதாரர் முறையாக சொத்து வரி செலுத்தி வருகிறார். இப்பேரூராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 01 முதல் 18 வார்டுகளில் பொது மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு வசதி, பொது சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அவ்வப்போது தேவைகளுக்கேற்ப செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்களின் புகாரும் அவ்வப்போது உடனுக்குடன் சரி செய்யப்பட்டு வருகிறது. மேலும், பேரூராட்சியில் மாதந்தோறும் வரவு செலவு அறிக்கைகள், திட்டப் பணிகள் செயல்பாடு உள்ளிட்டவைகளை பேரூராட்சி மன்ற கூட்டத்திலும் ஒப்புதல் பெறப்பட்டு எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் பேரூராட்சி நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
2	Financial Irregularities, Audit Violations & Manipulation of Accounts. It is observed that the Town Panchayat has failed to maintain proper financial documentation, Specifically: a) Expenditure ledgers, vouchers, invoices, fuel records and scheme accounts are not properly maintained. b) Many vouchers are missing or not entered into ledgers. c) Several expenditure were made without GST invoice filing. d)Work-wise expenditure, contractor payments and tender records show lack of GST compliance. e) This reflects deliberate manipulation of	மனுதாரரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள செலவினப் பேரேடுகள், பற்றுச்சீட்டுகள், விலைப்பட்டியல்கள், எரிபொருள் பதிவேடுகள் மற்றும் திட்டக் கணக்குகள் அனைத்தும் ஒவ்வொரு நிதியாண்டும் முறையாக பராமரிக்கப்பட்டு ஆண்டுதோறும் சிவகங்கை மாவட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆய்வாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு காண்பிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு வருகிறது. அனைத்து வேலைகளுக்கும் முறையாக செலவுகள்

	accounts, misuse of public money and possible fraud.	மேற்கொண்டு அதற்கான ஜிஎஸ்டி விலைப்பட்டியல் மாதந்தோறும் தாக்கல் செய்யப்பட்டு ஏப்ரல் 2026ஆம் மாதம் வரை திட்டப்பணிகள் மற்றும் பேரூராட்சி குத்தகை வருவாய் இனங்களுக்கான ஜிஎஸ்டி வருமான வரி ஆகியவை அரசுக்கு செலுத்தப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு திட்டப் பணியும், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2002ன்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கோ அல்லது நபருக்கோ பணி ஆணை வழங்கப்பட்டு, சிவகங்கை மண்டல செயற்பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் திருப்பத்தூர் தொகுப்பு உதவி பொறியாளர் அவர்களின் நேரடி தினசரி கண்காணிப்பின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டப்பணிகள் யாவும் செய்து முடிக்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கப்படும் தொகையானது, மதுரை மண்டல செயற் பொறியாளர் மற்றும் சிவகங்கை மண்டல உதவி செயற் பொறியாளர் ஆகியோர்களால் திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டி முடிக்கப்பட்ட பணிக்கு மட்டும் சிவகங்கை மண்டல உதவி செயற் பொறியாளர் அவர்களால் தொகை விடுவிப்பதற்கான தொகைக்கு மட்டும் பட்டியல் மேலொப்பம் செய்யப்பட்டு அதனடிப்படையில்தான் ஒப்பந்ததாரருக்கு தொகை

		விடுவிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட விவரப்படிக்கான உரிய அனைத்து பதிவேடுகளும் வருடந்தோறும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதில் எவ்வித முறைகேடோ அரசுக்கு நிதி இழப்போ ஏற்படவில்லை என்ற விவரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
3	3) Misuse of Financial Powers-Unaccounted Expenditure, Large sums appear to have been spent without proper documentation, approval process, accounting and audit compliance, resulting in suspected loss to Government funds.	இப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அனைத்திற்கும் ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவுற்றப் பிறகும், சிவகங்கை மாவட்டம் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகத்தை சார்ந்த தணிக்கை ஆய்வாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இப்பேரூராட்சியின் வரவு செலவுக்காக மேற்கொள்ளப்படும் வங்கி காசோலைகளை அனைத்தும் கண்காணிக்கப்பட்டும், ஒவ்வொரு வங்கி காசோலைக்கும், உண்டான வரவு செலவு புள்ளி விவரங்கள் அனைத்தும் ஒத்திசைவு செய்யப்பட்டு, சரி பார்க்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் வரவு செலவு அனைத்திற்கும், வரவு செலவு (பட்ஜெட்) அறிக்கை தயார் செய்யப்பட்டு, மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலருக்கு தொகை விடுவிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.10,000க்குள் முறையாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மற்றும் ரூ.10,000த்திற்கு மேல் உள்ள தொகை

		விடுவிக்கப்படுவதற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் பட்டியல் மேலொப்பம் பெறப்பட்டு, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது
4	Request for GST Action and Audit, In view of the above, I request the concerned GST authority action through your office, including: 1. Conduct a GST Audit (Section 65) for the last 5 years. 2. Conduct inspection and seizure of documents (Section 67) wherever required. 3. Issue Notice for non-filing of GST (Section 46) 4. Assess tax liability for unfiled years (Section 62) 5. Initiate recovery (Section 79) if tax was collected but not paid. 6. Initiate Prosecution (Section 132) if fraud is established.	இப்பேரூராட்சியில் 01 முதல் 18 வார்டுகளில் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கப்படும் தொகையானது மதுரை மண்டல செயற்பொறியாளர் மற்றும் சிவகங்கை மண்டல உதவி செயற்பொறியாளர் ஆகியோர்களால் திட்டப்பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டி முடிக்கப்பட்ட பணிக்கு மட்டும் சிவகங்கை மண்டல உதவி செயற்பொறியாளர் அவர்களால் தொகை விடுவிப்பதற்கான தொகைக்கு மட்டும் பட்டியல் மேலொப்பம் செய்யப்பட்டு அதனடிப்படையில்தான் ஒப்பந்ததாரருக்கு தொகை 2 சதவீதம் ஜிஎஸ்டி பிடித்தம் செய்யப்பட்டு தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பேரூராட்சியில் குத்தகை இனங்களுக்கு அரசு விதிமுறைகளின்படி வாடகையுடன் 18 சதவீதம் சேர்த்து வசூல் செய்யப்படுகிறது. பின்னர், மேற்கண்ட விவரப்படி ஏப்ரல் 2026ஆம் மாதம் வரை திட்டப்பணிகள் மற்றும் பேரூராட்சி குத்தகை வருவாய் இனங்களுக்கான பிடித்தம் செய்யப்பட்ட ஜிஎஸ்டி ஆகியவை அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், ஜிஎஸ்டி செலுத்துவது தொடர்பாக சிவகங்கை மாவட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கை

		துறையினரால் வருடந்தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்பட்டும் வருகிறது. இவற்றில் அரசு நிதி இழப்போ, முறைகேடோ ஏதும் ஏற்படவில்லை என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
5	llegal Water Connections Bribery Misappropriation of Collections I further submit that the Executive Officer has illegally granted numerous water connections to the public without following rules or maintaining proper records, expecially in ward No.1 (out of 18 Wards) where unauthorized connections are very high. It is also alleged that: i) Excess amounts are collected from the public in the name of "Government Charges". j) Payments are not properly recorded. k) Proper bills are not issued l) Collections are not accounted for indicating misappropriation of public money.	சிங்கம்புணரி பேரூராட்சியில் **2022-2023** முதல் அம்ரூத் **2.0** திட்டத்தில் குடிநீர் மேம்படுத்துதல் பணியில் பைப்லைன் விஸ்தரிப்பு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் நாளது தேதி வரை குடிநீர் இணைப்பு ஏதும் வழங்கப்படவில்லை. மேலும், புதிய குடிநீர் இணைப்பு தொடர்பாக ஆண்டுதோறும் சிவகங்கை மாவட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, புதிய குடிநீர் இணைப்பு பதிவேட்டுடன் ஒப்புநோக்கு செய்யப்பட்டு, காண்பிக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
6	Corruption & Disproportionate Assets It is widely known among the public that the Executive Officer collects bribes daily and huge illegal money is being extorted from the public. Before joining the Town Panchayat, he was only a tenant. However, now he has allegedly acquired. • Properties worth several crores, • Two Benz Cars Which are grossy disproportionate to his known sources of income, indicating, corruption, illegal gratification and benami transactions.	இப்பேரூராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக **30.04.2026**ல் பணி ஓய்வு பெற்ற திரு. கரு. சண்முகம் அவர்களின் சொத்து விவரங்கள் சார்ந்த தகவல்கள் இவ்வலுவலகத்தில் இல்லை என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

7	Non-Execution/Poor Execution of Works but Full Bills Claimed It is respectfully submitted that several works/projects sanctioned and executed through this Town Panchayat are found to be: g) Incomplete. h) Poorly executed, or i) not executed at, all, But full bills appear to have been claimed and passed as if the works were completed, resulting in suspected large scale misappropriation.	இப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு திட்டப் பணியும், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2002ன்படி நிறுவனத்திற்கோ அல்லது நபருக்கோ பணி ஆணை வழங்கப்பட்டு, சிவகங்கை மண்டல செயற் பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் திருப்பத்தூர் தொகுப்பு உதவி பொறியாளர் அவர்களின் நேரடி தினசரி கண்காணிப்பின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டப் பணிகள் யாவும் செய்து முடிக்கப்பட்டுள்ளது. திட்டப் பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கப்படும் தொகையானது, மதுரை மண்டல செயற் பொறியாளர் மற்றும் சிவகங்கை மண்டல உதவி செயற் பொறியாளர் ஆகியோர்களால் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டி முடிக்கப்பட்ட பணிக்கு மட்டும் சிவகங்கை மண்டல உதவி செயற் பொறியாளர் அவர்களால் தொகை விடுவிப்பதற்கான தொகைக்கு மட்டும் பட்டியல் மேலொப்பம் செய்யப்பட்டு அதனடிப்படையில்தான் ஒப்பந்ததாரருக்கு தொகை விடுவிக்கப்பட்டு வருகிறது. இதில் மனுதாரர் தெரிவித்துள்ளவாறு முடிவுடையாத திட்டப் பணிகளுக்கு சிவகங்கை மண்டல உதவி செயற்பொறியாளர் பட்டியல் மேலொப்பம் அனுமதியின்றி ஒப்பந்ததாரருக்கு தொகை விடுவிக்கப்படவில்லை என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

		மேற்கண்ட விவரப்படியான உரிய அனைத்து பதிவேடுகளும் வருடந்தோறும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்ற விவரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
8	Misuse of Cheques, Illegal Budget Allotment & Misappropriation of Funds. I also submit that there are serious allegations of: a) cheque misuse, b) illegal budget allotment, c) diversion of funds and d) misuse of Town Panchayat financial powers, which require immediate Ombudsman-level intervention.	இப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக பெறப்படும் வங்கி காசோலைகள் அனைத்தும் முறையாக பயன்படுத்தப்பட்டு, செலவு செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவுற்றப்பிறகும், சிவகங்கை மாவட்டம் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலகத்தை சார்ந்த தணிக்கை ஆய்வாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இப்பேரூராட்சியின் வரவு செலவுக்காக மேற்கொள்ளப்படும் வங்கி காசோலைகளை அனைத்தும் கண்காணிக்கப்பட்டும் ஒவ்வொரு வங்கி காசோலைக்கும் உண்டான வரவு செலவு புள்ளி விவரங்கள் அனைத்தும் ஒத்திசைவு செய்யப்பட்டு சரி பார்க்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் வரவு செலவு அனைத்திற்கும், வரவு செலவு (பட்ஜெட்) அறிக்கை தயார் செய்யப்பட்டு, மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, பேரூராட்சி செயல் அலுவலருக்கு தொகை விடுவிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.10000க்குள் முறையாக செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரூ.10000த்திற்கு மேல் உள்ள தொகை விடுவிக்கப்படுவதற்கு

		பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் பட்டியல் மேலொப்பம் பெறப்பட்டு, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை உறுதியளித்து பணிந்து தெரிவிக்கப்படுகிறது.
9	**Illegal Building Approval** The Executive Officer cancelled the property tax assessment of me Mr. Subramanian, who is the original owner of the property. Without verifying the Encumbrance Certificate (EC) standing in the name of Mr. Subramanian, the Executive Officer cancelled the assessment in his name and illegally granted building approval to one Mr. Balamuguan ,who is the merely an attested witness to Mr. Subramanian's documents. Furthermore, the construction carried out is not in accordance with the approved plan.	சிங்கம்புணரி பேரூராட்சி வார்டு எண்.10, சர்வே எண். 557/10Aல் அமைந்துள்ள சொத்தானது கோவிந்தராஜன் என்பவரின் பெயரிலிருந்து மோசடி செய்து முறைகேடாக சுப்பிரமணியன் என்பவருக்கு கிரையம் செய்து இருந்ததை கோவிந்தராஜன் என்பவர் இம்முறைகேட்டினை இரத்து செய்வதற்கு வருவாய் துறை மற்றும் சார்பு பதிவாளர் அலுவலகத்தினை அணுகி மோசடியாக பதிவு செய்ததினை இரத்து செய்து மேற்கண்ட சொத்தினை தனது பெயருக்கு பட்டா மாற்றி பின்னர் பாலமுருகன் என்பவருக்கு கிரையம் எழுதி கொடுத்துள்ளார். என்பதனை ஆவணத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தில் சுப்பிரமணியன் என்பவர் தனக்கு சொந்தமானது என தெரிவித்து கட்டடம் கட்ட துவங்கப்பட்டு பின்னர் இதே இடத்தில் ஆர். பாலமுருகன் என்பவரும் முறையாக இணையதளத்தில் கட்டட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் பேரூராட்சியில் இவ்விடம் சுப்பிரமணியனுக்கா அல்லது பாலமுருகன் என்பவருக்கா சொந்தமானதா என்பதனை உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதியில் ஆர். பாலமுருகன் என்பவருக்கே சொந்தமானது என ஊர்ஜிதம் செய்யப்பட்டு கட்டட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மோசடியாக சுப்பிரமணியன் என்பவரின் பெயர் உள்ள

		சொத்துவரி இரசீதினையும் இரத்து செய்யப்பட்டு இப்பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிந்து தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட விவரப்படிக்கான அனைத்து ஆவணங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சனையின் காரணமாக தான் இப்பேரூராட்சியின் பணி ஓய்வு பெற்ற செயல் அலுவலரான திரு. கரு. சண்முகம் மற்றும் வரித்தண்டலர்கள் உள்ளிட்டோர்கள் மீது இராஜா மற்றும் இவரது மனைவி ஹரிதா மற்றும் சில நபர்களின் பெயர்களில் பல்வேறு மனுக்கள் பல்வேறு உயர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
10	**Non-reply to RTI Applications** The Town Panchayat is repeatedly failing to reply to my RTI applications dated 15.08.2025, 24.11.2025 and 19.12.2025, which itself indicates deliberate suppression of information and lack of transparency.	இப்பேரூராட்சியில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் விதிகளின்படி 30 தினங்களுக்குள் பதில் அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், இப்பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சுந்தரம் நகர் தெருவில் வசிக்கும் திரு. கோவிந்தராஜன் என்பவர் தனது சொத்தினை தனது இரு மகன்களான சுந்தரம் மற்றும் ராஜா ஆகியோர்களுக்கு சரிபாதியாக பிரித்து கொடுக்காததால் தனது ஒரு மகனான ராஜா என்பவருக்கும் தந்தையான திரு. கோவிந்தராஜன் என்பவருக்கும் இடையே எழுந்துள்ள சொத்து பிரச்சனையின் காரணமாகவும், இச்சொத்திற்கான கட்டட அனுமதி மற்றும் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வது குறித்து இப்பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு அளிக்கப்பட்ட மனுவின் காரணமாக எழுந்த பிரச்சனையினால் இப்பேரூராட்சியின் பணி ஓய்வு பெற்ற செயல் அலுவலரான திரு. கரு. சண்முகம் மற்றும் வரித்தண்டலர்கள் உள்ளிட்டோர்கள் மீது திரு. ராஜா என்பவரால் இப்புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், இவர்களின் குடும்ப சொத்துப் பிரச்சனை காரணமாக ராஜா என்பவரின் சகோதரரான ஆர். கிருஷ்ணகுமார், இவரின் தந்தையான கோவிந்தராஜன், மனைவியான ஹரிதா மற்றும் தனி நபரான பாலமுருகன் ஆகியோர்கள் இப்பேரூராட்சியின் மீதும், இப்பேரூராட்சியின் பணி ஓய்வு பெற்ற செயல் அலுவலரான திரு. கரு. சண்முகம் மீதும் மற்றும் இப்பேரூராட்சியின் மன்றத்தலைவர் மீதும் பல்வேறு மனுக்கள் மூலமாக பல்வேறு அரசு உயர் அலுவலகத்திற்கும், உயர்நீதிமன்றத்திற்கும், மாவட்ட நீதிமன்றத்திற்கும், உள்ளாட்சித் தணிக்கைத் துறை அலுவலகத்திற்கும், மாநில ஊழல் தடுப்பு கண்காணிப்பு அலுவலகத்திற்கும் அனுப்பி வைத்தும்

மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வாயிலாக இப்பேரூராட்சிக்கும் பல்வேறு விதமான வகைகளில் மேற்பட்டவர்களின் பெயர்களின் புகார் மனுக்கள் அளிக்கப்பட்டு, தொடர்ந்து இச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற விவரத்தினையும் இதன் மூலம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட புகாருக்கான பதிலறிக்கையினை ஏற்று ராஜா த/பெ கோவிந்தராஜன் என்பவர் வேண்டுமென்றே இப்பேரூராட்சியில் ஓய்வு பெற்ற செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது அளித்த புகார் மனுவினை தள்ளுபடி செய்து உரிய ஆணை பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. G. ராஜா மற்றும் எதிர்மனுதாரரான சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 01.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.06.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. G. ராஜா தனது 27.06.2026 நாளிட்ட கடிதத்தில் தனது 26.03.2026 நாளிட்ட புகார் மனு தொடர்பாக சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் நேரடியாக சென்று புகார் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் என்னால் ஆய்வு செய்யப்பட்டதில் தனக்கு திருப்திகரமாக உள்ளது எனவும், எனவே தனது புகார் மனு திரும்ப பெறுவதாகவும் மற்றும் விசாரணையை இரத்து செய்து வழக்கை முடித்து வைக்குமாறு கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" I personally visited the office of the Executive Officer, Singampunari Selection Grade Town Panchayat and inspected all the documents required in connection with my complaint and have thoroughly verified them. Having gone through the said documents, I have received a satisfactory explanation regarding my complaint and I no longer wish to pursue this enquiry.

I therefore hereby fully withdraw the above complaint filed by me on 26.03.2026. I respectfully request that the enquiry scheduled to be held on 01.07.2026 be cancelled and this case be closed accordingly" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 01.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

" சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றிய திரு. கரு. சண்முகம் என்பவர் வயது முதிர்வின் காரணமாக கடந்த 30.04.2026ஆம் தேதியன்று தணிக்கைத் தடை நிலுவையில் உள்ள நிலையில் நிபந்தனையுடன் பணி ஓய்வு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் செயல் அலுவலர் இப்பேரூராட்சியில் 22.02.2024 முதல் 30.04.2026 முடிய பணிபுரிந்துள்ளார். மனுதாரரால் வழங்கிய பல்வேறு புகார் மனுக்களின் அடிப்படையிலும் மேலும் இவர் 30.04.2026 அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற இருந்த காரணத்தினாலும் கடந்த ஆண்டின் வரவு செலவு கணக்குகள், திட்டப் பணிகள், பேரேடுகள், இருப்புப் பதிவேடுகளும் 21.04.2026 மற்றும் 22.04.2026ஆம் தேதிகளில் ஆய்வுக் குழு அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் மதுரை மண்டல இணை இயக்குநர் , உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை அவர்களாலும் கடந்த 27.05.2026 தேதியிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பேரூராட்சியில் 2024-25ஆம் ஆண்டு வரை சிவகங்கை மாவட்டம், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மூலம் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வேண்டுமென்றே பேரூராட்சி நிர்வாகத்தின் மீது அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் புகாரினை அளித்துள்ளார் என பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் கடிதம், எதிர்மனுதாரரான சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 26.03.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சியில் கீழ்க்காணும் இனங்களில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக தெரிவித்திருப்பதை அறிய வருகிறது.

1. பொதுமக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் கோரிக்கைகள் மேற்கொள்ளாதது,
2. திட்டப் பணிகளில் நிதிமுறைகேடுகள் நடைபெற்றுள்ளன,
3. ரூ.10,000 அங்கீகரிக்கப்பட்ட செலவின தொகையில் அரசு நிதியிழப்பு,
4. GST வரி செலுத்தாமல் இருப்பது,
5. சட்டவிரோத குடிநீர் இணைப்புகள்வழங்குதல்,
6. பேரூராட்சி செயல் அலுவலரின் வருமானத்திற்கு மீறிய சொத்து,
7. திட்டப் பணிகள் நிறைவேற்றப்படாதது,
8. காசோலைகளை தவறாக பயன்படுத்துதல்,
9. விதிமீறி கட்டட அனுமதி அளித்தல்,
10. தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு தகவல் அளிக்காதது

தொடர்பாக மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களுக்கு முறையே பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை அறிய வருகிறது.

1. <u>சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சியின் மோசமான நிர்வாகம்</u>

பேரூராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் பொது மக்களின் கோரிக்கைகள் செயல்படுத்தியும் அடிப்படை வசதிகள் மேற்கொண்டும் எவ்வித குறைபாடுகளின்றி பேரூராட்சி நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

2. <u>நிதி முறைகேடுகள், தணிக்கை மீறல்</u>

பேரூராட்சியின் அனைத்து திட்டப் பணிகளுக்கான கணக்குகள் முறையாக பராமரிக்கப்பட்டும், ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. மற்றும் உரிய தணிக்கையும் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்றது.

3. அரசு நிதி இழப்பு

பேரூராட்சி செலவினங்கள் அனைத்தும் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டும், செலவினங்கள் காசோலைகள் மூலம் மேற்கொள்வதாலும், ரூ.10,000க்கு அதிகமான செலவினங்களுக்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் பட்டியலில் மேலொப்பம் பெறப்படுகிறது.

4. GST வரி செலுத்தாது

ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகள் முடிவுற்றதும், பட்டியல் தொகை விடுவிக்கும் போது ஒப்பந்ததாரரிடம் GST வரி பிடித்தம் செய்யப்பட்டு முறையாக செலுத்தப்படுகிறது. மேலும் இதனை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் ஆண்டுதோறும் ஆய்வு செய்யப்படுகிறது.

5. சட்ட விரோத குடிநீர் இணைப்புகள்

குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டதை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் உரிய பதிவேட்டுடன் ஒப்பு நோக்கு செய்யப்பட்டு வருவதால் எவ்வித முறைகேடுகளும் நடைபெறுவதில்லை.

6. செயல் அலுவலரின் வருமானத்திற்கு மீறிய சொத்து

பேரூராட்சி செயல் அலுவலர் சொத்து விவரங்கள் சார்ந்த தகவல்கள் இப்பேரூராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படுவதில்லை.

7. திட்டப் பணிகள் நிறைவேற்றப்படாதது

பேரூராட்சி திட்டப் பணிகள் அனைத்தும் பொறியாளர் மற்றும் மண்டல செயற் பொறியாளரின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. பணிகள் முடிவு பெறாமல் எவ்வித பட்டியல் தொகையும் வழங்கப்படுவதில்லை. உரிய தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8. காசோலைகள் தவறாக பயன்படுத்துதல்

பேரூராட்சியின் அனைத்து செலவினங்களுக்கும் காசோலை மூலம் வழங்கப்பட்டு, முறையாக தணிக்கை துறை மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. பேரூராட்சி நிதி ஒதுக்கீடு குறித்து பேரூராட்சி மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே முடிவு செய்யப்படுகிறது. ரூ.10,000க்கு மேற்பட்ட செலவினங்களுக்கு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் பட்டியலில் மேலொப்பம் பெறப்படுகிறது.

9. சட்ட விரோத கட்டட அனுமதி

வார்டு எண்.10, புல எண். 557/10Aல் கோவிந்தன் என்பவருக்கு சொந்தமான சொத்தை மோசடியாக சுப்பிரமணியன் என்பவருக்கு கிரையம் செய்ததை எதிர்த்து, வருவாய்த் துறை மூலம் மேற்காணும் சொத்தினை கோவிந்தன் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து பாலமுருகன் என்பவருக்கு கிரையம் செய்துள்ளனர். முறைகேடாக கிரையம் பெற்ற சுப்பிரமணியன் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும்போது பாலமுருகன் என்பவரும் கட்டடம் கட்ட அனுமதி கோரப்பட்டதில், மேற்காணும் சொத்தானது பாலமுருகன் என்பவருக்கே சொந்தமானது என உறுதி

செய்யப்பட்டது. எனவே சுப்பிரமணியன் என்ற பெயரிலிருந்த சொத்துவரி இரசீதுகளை இரத்து செய்யப்பட்டது.

10. RTI மனுக்களுக்கு தகவல் அளிக்காதது

தகவல் பெறும் உரிமை சட்டப்படி 30 நாட்களுக்குள் தகவல் அளிக்கப்படுகிறது.

மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த **26.03.2026** நாளிட்ட முறையீட்டு மனுவில் சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சியின் செயல்பாடுகள் குறித்து புகார் தெரிவித்துள்ளார். மனுதாரரின் புகார்களுக்கு பேரூராட்சி செயல் அலுவலர் தனது **15.05.2026** நாளிட்ட அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். இதனை தொடர்ந்து மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள **27.06.2026** நாளிட்ட கடிதத்தில் தனது **26.03.2026** நாளிட்ட புகார் மனு தொடர்பாக சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் கையாளப்படும் தனது புகார் தொடர்பான அனைத்து ஆவணங்களும் ஆய்வு செய்ததாகவும், பேரூராட்சியின் நடவடிக்கைகள் திருப்திகரமாக உள்ளது எனவும் எனவே தனது **26.03.2026** நாளிட்ட புகார் மனுவை திரும்ப பெறுவதாக தெரிவித்துள்ளார் என்பதும் அறிய முடிகிறது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இனங்களில் அதன் தொடர்பான ஆவணங்களை எதன் அடிப்படையில் மனுதாரருக்கு ஆய்வு செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஒரு தனிநபர், அரசு பதிவேடுகளை ஆய்வு செய்ய அனுமதி அளிக்கப்பட்டதன் மூலம் அரசு ஆவணங்களில் பாதுகாப்பு தன்மை குறித்து ஐயம் எழுகின்றது. இவ்வாறு அரசு விதிமுறைகளுக்கு மீறி ஆய்வு செய்ய அனுமதியளித்த சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

மனுதாரர் தனது **26.03.2026** நாளிட்ட முறையீட்டு மனுவில் சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சியில் **10** இனங்களில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என தெரிவித்துள்ளார்.

இவற்றில்,

1. திட்டப்பணிகளில் நிதி முறைகேடு.
2. ரூ.10,000 வரை செயல் அலுவலர் செலவு செய்ய அங்கீகரிக்கப்பட்ட தொகையில் அரசு நிதியிழப்பு ஏற்பட்டது.
3. GST வரி செலுத்தாமல் இருப்பது.

4. காசோலைகள் தவறாக பயன்படுத்துதல் ஆகிய 4 இனங்களில் பேரூராட்சியில் மேற்கொண்ட செலவினங்களில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கை குழு மூலம் தணிக்கை செய்து அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும்,

1. பொதுமக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் கோரிக்கைகள் மேற்கொள்ளாதது.
2. சட்டவிரோத குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டது.

3. திட்டப் பணிகள் நிறைவேற்றப்படாமை.
4. பேரூராட்சி செயல் அலுவலரின் வருமானத்திற்கு மீறிய சொத்து தொடர்பாக.
5. விதிமீறி கட்டட அனுமதி அளித்தல்

ஆகிய 5 இனங்கள் குறித்து பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் மூலம் ஆய்வு செய்து அவரின் அறிக்கையை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் மனுதாரர் கோரும் தகவல்கள் பேரூராட்சியால் வழங்கப்படுவதில்லை என்கிற புகார் குறித்து, உரிய அமைப்பை நாடி நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. G. ராஜா,
சுந்தரம் நகர், 2வது தெரு,
கதவு எண். 9-3-14, BSNL அலுவலகம் அடுத்து,
சிங்கம்புணரி, சிவகங்கை மாவட்டம் - 630 052
2. செயல் அலுவலர்,
சிங்கம்புணரி தேர்வுநிலை பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.
3. இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை,
571, அண்ணாசாலை, சென்னை - 35
4. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer). (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/8/26
செயலாளர்